கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affair, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

4569

எனது இல. / මගේ අංකය / My No. NP/3/3/FA/C/2017
உமது இல / ඔබේ අංකය / Your No
திகதி / දිනය / Date. 05.09.2018

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
வடக்கு மாகாணம்.

வலயக்கல்வி அலுவலகம் ... 1 SEP 2018 ... ZONAL EDUCATION OFFICE

ADE/DEO/PL

**சேவைக்கால, முகாமைத்துவ, பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையாடல்கள், கூட்டங்கள், குழு வேலைச் செயற்பாடுகள், வினாத்தாள் தயாரித்தல், திருத்துதல், நிபுணத்துவ ஆலோசனைச் சேவை, கற்றல் கையேடுகள் தயார் செய்தல், ஆய்வுகள் மேற் கொள்ளல், பரீட்சைகள் நடாத்தல், வெளி அபிவிருத்தி போன்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுகக்கான கொடுப்பனவு**

மேற்படி விடயம் தொடர்பான, மாகாண கல்வி அமைச்சு சுற்றறிக்கைகள் - 01/2017, 01/2017(I) என்பவற்றின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்படி சுற்றுநிருபத்தின் திருத்தமாக சம இலக்க 05.09.2018 ஆம் திகதிய மாகாண கல்வி அமைச்சு சுற்றறிக்கை - 01/2017(II) இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது.

என் .எஸ்.ஆர்.சிவரூபன்
பிரதம கணக்காளர்
செயலாளருக்காக

என்.எஸ்.ஆர்.சிவரூபன்
பிரதம கணக்காளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

பிரதி:-
சகல கிளைத் தலைவர்களுக்கும், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affair, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

எனது இல. / මගේ අංකය / My No. NP/3/3/FA/C/2017
உமது இல. / ඔබේ අංකය / Your No.
திகதி / දිනය / Date. 2018.09.05

மாகாணக் கல்வி அமைச்சு சுற்றறிக்கை - 01/2017(ii)

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
வடக்கு மாகாணம்.

**சேவைக்கால, முகாமைத்துவ, பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையாடல்கள், கூட்டங்கள், குழு வேலைச் செயற்பாடுகள், வினாத்தாள் தயாரித்தல், திருத்துதல், நிபுணத்துவ ஆலோசனைச் சேவை, கற்றல் கையேடுகள் தயார் செய்தல், ஆய்வுகள் மேற்கொள்ளல், பரீட்சைகள் நடாத்தல், வெளி அபிவிருத்தி போன்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கொடுப்பனவு**

எமது 2017.01.01 ஆம் திகதிய 01/2017 இலக்க சுற்றறிக்கை மற்றும் 2017.05.25 ஆம் திகதிய 01/2017(i) சுற்றறிக்கை என்பவற்றில் 2018.09.04 ஆம் திகதிய பிரதம செயலாளரின் அனுமதியின் அடிப்படையில் பின்வரும் பந்திகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

**சுற்றறிக்கை இல. 01/2017, பந்தி இல - 07**

குறித்த பாடத்தில் அல்லது துறையில் செயலமர்வு அல்லது பயிற்சிப்பட்டறை இடம்பெறுமாயின் அந்தப் பாடம் அல்லது துறைக்குரிய உத்தியோகத்தர் அல்லது மாகாணக் கல்விப்பணிப்பாளர் அல்லது வலயக் கல்விப்பணிப்பாளர்களினால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர் இணைப்பாளராக கடமையாற்ற வேண்டும். அவர்களுக்குரிய கொடுப்பனவு பின்வருமாறு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| 1-2 நாட்கள் | ரூபா. 500.00 |
| 3-4 நாட்கள | ரூபா. 750.00 |
| 5 நாட்களும் அதற்கு மேலும் | ரூபா. 1,000.00 |

**சுற்றறிக்கை இல. 01/2017, பந்தி இல - 08**

**வள ஆளணியினருக்கான கட்டணங்கள் (மணித்தியால வீதம்)**

| | | |
|---|---|---|
| 1 | i. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றின் சிரேஷ்ட பேராசிரியர்கள் / பேராசிரியர்கள் (சேவையிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற)<br>ii. இலங்கை நிர்வாக சேவை மற்றும் சமமான நாடளாவிய சேவைகளில் விசேட தரத்திலுள்ள அலுவலர்கள்<br>iii. அரச கூட்டுத்தாபனம் அல்லது சட்டவாக்க சபையில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்திலுள்ள C2-1, C2-2 மற்றும் C2-3 சேவை வகுதிகளிலுள்ள அலுவலர்கள் | ரூபா. 1,500.00 |
| 2 | i. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றின் சிரேஸ்ட விரிவுரையாளர்கள் (சேவையிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற)<br>ii. இலங்கை நிர்வாக சேவை மற்றும் சமமான நாடளாவிய சேவைகளில் 1ம் தரத்திலுள்ள அலுவலர்கள் (சேவையிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற)<br>iii. ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் வகுப்பு 1 இலுள்ள அலுவலர்கள் (சேவையிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற)<br>iv. அரச கூட்டுத்தாபனம் அல்லது சட்டவாக்க சபையில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்திலுள்ள C1-1, C1-2 மற்றும் C1-3, AR-2 சேவை வகுதியிலுள்ள அலுவலர்கள். | ரூபா. 1,300.00 |

| | | |
|---|---|---|
| 3 | i. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றின் விரிவுரையாளர்கள். | ரூபா. 1,200.00 |
| | ii. இலங்கை நிர்வாக சேவை மற்றும் சமமான நாடளாவிய சேவையில் 11ம் தரத்திலுள்ள அலுவலர்கள். | |
| | iii. ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் வகுப்பு II இலுள்ள அலுவலர்கள். | |
| | iv. அரச கூட்டுத்தாபனம் அல்லது சட்டவாக்க சபையில் மத்திய முகாமையாளர் தரத்திலுள்ள C2, C3 சேவை வகுதிகளிலுள்ள அலுவலர்கள் மற்றும் சிரேஷ்ட கல்வியியல் ஆராச்சி சேவை வகுதிகளிலுள்ள, AR-2 தொகுதிச் சம்பளம் பெறுவோர். | |
| 4 | i. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றின் பயிலுநர் விரிவுரையாளர்கள். | ரூபா. 1,000.00 |
| | ii. இலங்கை நிர்வாக சேவை மற்றும் சமமான நாடளாவிய சேவையில் III ம் தரத்திலுள்ள அலுவலர்கள். | |
| | iii. ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் வகுப்பு III இலுள்ள அலுவலர்கள். | |
| | iv. அரச கூட்டுத்தாபனம் அல்லது சட்டவாக்க சபையில் மத்திய முகாமையாளர் தரத்திலுள்ள C1 மற்றும் கல்வியியல் ஆராச்சி சேவை வகுதிகளிலுள்ள, AR-1 இல் சம்பளம் பெறுவோர். | |
| | v. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாதாரிகள் (தனியார் துறையில் சேவையிலுள்ளோர்) | |
| 5 | i. இலங்கை அதிபர் சேவையில் I/II/III ம் தரத்திலுள்ள அலுவலர்கள். | ரூபா. 900.00 |
| | ii. இலங்கை ஆசிரியர் சேவையில் 1 ஆம் தரத்திலுள்ள அலுவலர்கள். | |
| | iii. ஆசிரிய ஆலோசகர்கள். | |
| | iv. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டதாரிகள் | |
| | v. கனிஷ்ட முகாமையாளர் சேவை வகுதியிலுள்ள அலுவலர்கள். | |
| 6 | ஏனைய தகமை பெற்ற அலுவலர்கள் | ரூபா. 800.00 |
| 7 | செய்முறை காட்டுனர் | ரூபா. 200.00 |

இச் சுற்றறிக்கையில் விசேடமாக குறிப்பிட்டாலன்றி வளவாளர்களுக்குஎவ்வித போக்குவரத்துப் படிகளோ இணைந்த படிகளோ வழங்க முடியாது. இக் கொடுப்பனவுகள் யாவும் காசோலை மூலமாகவே வழங்கப்பட வேண்டும்.

**சுற்றறிக்கை இல. 01/2017, பந்தி இல - 14**

**பந்தி இல. 14 I. பயிலுனர் / பங்பற்றுனர் கொடுப்பனவுகள்**

- பங்குபற்றுனருக்கு நாளொன்றுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா.300.00 வழங்கப்படலாம். மதிய உணவு வழங்கப்படாவிடின் ரூபா. 500.00 வழங்கப்படலாம்.
- பங்கு பற்றுனர்களுக்கு அழைப்பு விடுக்கும்போது இது தொடர்பாக பூரண அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும்.
- பரீட்சை வினாத்தாள் தயாரிப்பு மற்றும் திருத்தப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா 500.00 வழங்கப்படலாம். வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தருபவர்களுக்கு தாபன விதிக்கோவைகளுக்கமைய பிரயாணப்படி, இணைந்தபடி வழங்கப்படலாம்.
- பங்குபற்றுநர்களுக்கு அழைப்புக்கடிதம் கட்டாயமாக வழங்கப்படுதல் வேண்டும்.
- வளவாளராகச் செயற்படுபவர்களுக்கும் நியமனக்கடிதம், அழைப்புக்கடிதம் வழங்கப்படல் வேண்டும்.
- பங்குபற்றுநர்களுக்கு வரவுச்சான்றிதழ் பயிற்சி அல்லது செயலமர்வு முடிவில் கட்டாயமாக வழங்கப்படல் வேண்டும்.
- பயிற்சியின் இறுதியில் பகுப்பாய்வு அறிக்கை பயிற்சி இணைப்பாளரினால் கட்டயாமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பந்தி இல. 14 II. ஏனைய அலுவலர்களுக்கான கொடுப்பனவு

| | | |
|---|---|---|
| 01 | நிகழ்ச்சி திட்ட மேற்பார்வை அலுவலர் - (ஒரு செயலமர்வு/ பயிற்சி நெறிக்கு) (ஒரு நாளுக்கு மட்டும்) | ரூபா. 600.00 |
| 02 | நிதி மேற்பார்வை அலுவலர் - (ஒரு செயலமர்வு / பயிற்சிநெறிக்கு ஒரு நாளுக்கு மட்டும்) | ரூபா. 600.00 |
| 03 | முகாமைத்துவ உதவியாளர் - (நிர்வாகம் /அபிவிருத்திப் பிரிவு - ஒருவருக்கு ஆகக் கூடியது இரண்டு நாட்களுக்கு) | ரூபா. 350.00 |
| 04 | முகாமைத்துவ உதவியாளர் - (நிதிப்பிரிவு ஒரு நாளுக்கு மட்டும்) | ரூபா. 350.00 |
| 05 | காசாளர் (ஒரு நாளுக்கு மட்டும்) | ரூபா. 350.00 |
| 06 | சாரதி, அலுவலக பணியாளர், தொழிலாளர், ஆய்வுகூட உதவியாளர், நூலக உதவியாளர் - (செயலமர்வு / பயிற்சி நெறி நடைபெறும் ஒவ்வொரு நாளுக்கும்) | ரூபா. 250.00 |

**சுற்றறிக்கை இல. 01/2017, 01/2017(i) பந்தி இல - 15**

செயலமர்வுகளுக்கான தேனீர், சிற்றுண்டி, உணவுக்கான கொடுப்பனவுகள்

01. வதிவிடமற்ற செயலமர்வுகள்

| இல | விபரம் | ஒரு நபருக்குரிய ஆகக் கூடிய ஒதுக்கீடு | | | |
|---|---|---|---|---|---|
| | | தண்ணீர் போத்தல் ½ L | காலை தேனீர், சிற்றுண்டி | மதிய உணவு | மாலை தேனீர், சிற்றுண்டி |
| 01 | மூன்று மணித்தியாலத்திற்கு உட்பட்ட செயலமர்வுகளுக்கு | --- | 75.00 | --- | --- |
| 02 | ஆறு மணித்தியாலங்கள் வரை நடைபெறும் செயலமர்வுகளுக்கு | 35.00 | 75.00 | சைவம் 120.00 - 150.00<br>அசைவம் 150.00 - 200.00 | --- |
| 03 | ஆறு மணித்தியாலத்திற்கு மேல் நடைபெறும் செயலமர்வுகளுக்கு | 35.00 | 75.00 | சைவம் 120.00 - 150.00<br>அசைவம் 150.00 - 200.00 | 75.00 |

02. வதிவிட செயலமர்வுகள்

| இல. | விடயம் | ஒதுக்கீடு (ரூபா) |
|---|---|---|
| 01 | அதிகாலை தேனீர் | 30.00 |
| 02 | காலை உணவு | 100.00 - 120.00 |
| 03 | காலை தேனீர், சிற்றுண்டி | 75.00 |
| 04 | மதிய உணவு | சைவம் 120.00 - 150.00<br>அசைவம் 150.00 - 200.00 |
| 05 | மாலை தேனீர், சிற்றுண்டி | 75.00 |
| 06 | இரவு உணவு | 120.00 - 140.00 |
| 07 | தண்ணீர் போத்தல் ½ L | 70.00 |

03. தரவட்டங்கள்

| இல. | விடயம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 01 | காலை தேனீர், சிற்றுண்டி | ரூபா. 75.00 |

**கூட்டங்கள்**

கூட்டங்களுக்கு இணைப்பாளர், மேற்பார்வையாளர், கணக்காளர், முகாமைதுவ உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் சாரதிகளுக்கான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படலாகாது.

| இல | விபரம் | ஒரு நபருக்குரிய ஆகக் கூடிய ஒதுக்கீடு | | | |
|---|---|---|---|---|---|
| | | தண்ணீர் போத்தல் ½ L | காலை தேனீர், சிற்றுண்டி | மதிய உணவு | மாலை தேனீர், சிற்றுண்டி |
| 01 | மூன்று மணித்தியாலத்திற்கு உட்பட்ட கூட்டங்களுக்கு | --- | 75.00 | --- | --- |
| 02 | ஆறு மணித்தியாலங்கள் வரை நடைபெறும் கூட்டங்களுக்கு | 35.00 | 75.00 | சைவம் 120.00 - 150.00<br>அசைவம் 150.00 - 200.00 | --- |
| 03 | ஆறு மணித்தியாலத்திற்கு மேல் நடைபெறும் கூட்டங்களுக்கு | 70.00 | 75.00 | சைவம் 120.00 - 150.00<br>அசைவம் 150.00 - 200.00 | 75.00 |

- ஏனைய விடயங்கள் ஏற்கனவே நடைமுறையிலுள்ள சுற்றுநிருபங்கள் 01/2017, 01/2017(i) என்பவற்றில் உள்ளவாறு அமையும்.
- இத்திருத்தம் 2018.09.05 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

சி.சத்தியசீலன் 05/09/2018
செயலாளர்

சி. சத்தியசீலன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்

பிரதி:

01 பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணம்.

02 பிரதிப்பிரதம செயலாளர் - நிதி, மாகாண திறைசேரி, வடக்கு மாகாணம்.

03 பிரதி கணக்காய்வாளர் நாயகம், வடக்கு மாகாணம்.

04 பிரதம கணக்காய்வாளர், மாகாண கணக்காய்வு திணைக்களம், வடக்கு மாகாணம்.

05 பிரதம கணக்காளர், மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.